**செய்தி வெளியீடு எண்: 829** **நாள்: 24.11.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (24.11.2019) சென்னை, ராயப்பேட்டையில் நடைபெற்ற வேல்ஸ் பிலிம் இன்டர்நேஷனல் வெற்றி விழா–2019 நிகழ்ச்சியில் கலந்து கொண்டு திரைப்பட கலைஞர்களுக்கு விருதுகளை வழங்கி ஆற்றிய உரை**

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களை வணங்கி,

மாண்புமிகு அமைச்சர் சகோதரர் திரு.காமராஜ் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு.கருப்பணன் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்களே, மாண்புமிகு அமைச்சர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்களே, மரியாதைக்குரிய புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி திரு.தளவாய் சுந்தரம் அவர்களே,

மற்றும்

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற

சமத்துவக் கட்சியின் தலைவர் திரைப்பட நடிகர் மரியாதைக்குரிய அண்ணன் சரத்குமார் அவர்களே,

தேசிய முற்போக்குத் திராவிட கழகத்தினுடைய இளைஞரணி செயலாளர் மரியாதைக்குரிய திரு.சுதீஷ் அவர்களே,

திரைப்படத் தயாரிப்பாளர்களே,

திரைப்பட நடிகர்களே,

திரைப்படக் கலைஞர்களே,

வருகை தந்திருக்கின்ற பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

கழகத்தின் முன்னோடி பொறுப்பாளர்களே,

பெரியோர்களே, தாய்மார்களே,

திரைப்படத் துறையைச் சேர்ந்த அனைவருக்கும், பத்திரிகை, ஊடக நண்பர்களுக்கும் எனது முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் எத்தனையோ நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கின்றேன், அரசு விழாவிலே கலந்துகொண்டு பேசியிருக்கின்றேன், பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியிருக்கின்றேன். இந்தத் திரையுலகிலே திரைப்படத் தயாரிப்பாளர், திரைப்பட நடிகர் வேல்ஸ் நிறுவனத்தின் தலைவர் திரு.ஐசரி கே.கணேஷ் அவர்கள் நடத்துகின்ற நிகழ்ச்சியில்தான் முதன்முதலாக திரைப்படத் துறை விழாவில் நான் கலந்து கொண்டிருக்கின்றேன். அந்த வாய்ப்பைத் தந்தமைக்கு அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேல்ஸ் பிலிம் இன்டர்நேஷனல் தயாரிப்பில் உருவான மூன்று திரைப்படங்களின் வெற்றி விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

ஓர் ஆண்டுக்குள், அறிமுக இயக்குநர்களைக் கொண்டு, மூன்று படங்களை தயாரித்த மரியாதைக்குரிய

திரு. ஐசரி கே.கணேஷ் அவர்களை மனம் உவந்து பாராட்டுகிறேன்.

சிறந்த பொழுது போக்கு ஊடகமாக சினிமா திகழ்ந்து வருகிறது என்றால் மிகையாகாது.

அரசியல், கலை, பண்பாடு, கல்வி, வாழ்வியல் என அனைத்தையும் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாக இருப்பது தான் சினிமா.

குறிப்பாக, நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்படும் படங்கள் பெரும்பாலும் சிறந்த வெற்றியை பெற்று வருகிறது. எவ்வளவுதான் மனிதனுக்கு, கவலைகள், துன்பங்கள், துயரங்கள் இருந்தாலும் திரையரங்குகளுக்குச் சென்று இந்த நகைச்சுவையான படங்களைப் பார்க்கின்றபொழுது, மனதிலிருக்கின்ற அத்தனை கவலைகளும் பறந்து ஓடிவிடும். அத்தகைய திரைப்படங்களை நல்கிய மரியாதைக்குரிய திரு. ஐசரி கே.கணேஷ் அவர்களுக்கு மனமாற, உளமார பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தியாவில் முதன்முதலில் பேசாப் படத்தைத் தயாரித்து வெளியிட்டவர் '**தாதாசாகிப் பால்கே**'. இவரைத்தான் '**இந்திய சினிமாவின் தந்தை**' என்று அழைக்கிறார்கள். **1913**–ஆம் ஆண்டு தொடங்கிய இந்திய சினிமா, இன்று நூற்றாண்டைக் கடந்து மிகப் பெரிய வளர்ச்சியை பெற்றிருக்கிறது.

ஒரு படம் நூறு நாட்கள் ஓடினால், பெரிய படம் என்று அழைக்கப்படும்போது, இந்திய சினிமா நூறாண்டுகள் கடந்து வளர்ந்து வருகிறது என்றால், அது மாபெரும் சாதனை

அல்லவா ? இந்திய சினிமாவுக்கு இத்தனை பெருமைகளை தேடித்தருவதில் தமிழ் சினிமாவிற்கு அதிக பங்கு உள்ளது.

அப்போதும், இப்போதும், எப்போதும், உலகம் முழுவதும் பேசப்படும் திரைப்படங்களைத் தந்தவர்கள் நமது தமிழ் படைப்பாளர்கள். குறிப்பாக உலகப் படங்களுக்கு நிகராக தமிழ்ப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன என்பதைப் பார்க்கும்போது, மிக்க பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

1950ஆம் ஆண்டிலிருந்து 1960ஆம் ஆண்டு வரை இந்திய சினிமா வரலாற்றில் மிகப்பெரிய மாற்றமும் ஏற்றமும் ஏற்பட்டது.

**இந்த காலத்தில் தென்னகத்தின் சினிமா கோட்டையில் முடிசூடா மன்னராகப் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் திகழ்ந்தார்கள்.**

1924–ஆம் ஆண்டு, நாடகத்தின் மூலம் நடிப்பு உலகிற்கு வந்த டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், 1977–ஆம் ஆண்டு புரட்சித் தலைவராக, பொன்மனச் செம்மலாக, மக்கள் திலகமாக வளர்ந்து, தமிழ்நாட்டின் முதலமைச்சராக உச்ச நிலையை அடைந்தார். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தான் நடிக்கும் காலத்திலேயே ஏழை எளிய மக்களின் பசித்துயரத்தை அறிந்து, தனது வீட்டிற்கு யார், எந்த நேரத்தில் வந்தாலும் கேட்கும் முதல் கேள்வி – **சாப்பிட்டாயா ?** என்பதாகும்.

பகல் – இரவு எந்நேரமானாலும், வருபவர்கள் பசியுடன் இருந்தால், உள்ளே சென்று சாப்பிட்டு விட்டு வா, பிறகு பேசலாம் என்பார். இத்தகைய மனித நேயம் மிக்கவர் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

பசியின் கொடுமையை அறிந்த காரணத்தினாலே, தமிழகத்தின் முதலமைச்சராக பதவியேற்றவுடன், தமிழ்நாட்டில் படிக்கும் பள்ளிக் குழந்தைகள், பசியின் கொடுமையை அனுபவிக்கக்கூடாது என்று **சத்துணவுத் திட்டத்தை** கொண்டு வந்து சரித்திரம் படைத்த தலைவர் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் இதன் மூலம் தமிழகத்தில் மிகப் பெரிய இரண்டு நன்மைகள் நடைபெற்றன.

- ஒன்று தமிழகத்தில் வாழும் ஏழை எளிய குழந்தைகள் தங்கள் குழந்தைப் பருவத்தில் பசியால் வாடா நிலை ஏற்பட்டது.
- மற்றொன்று படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. இதனால் தமிழகம் கல்வியில் சிறந்து விளங்குகிறது.

டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் திரைத் துறையில் வெற்றி பெற்றதற்கு அவர் நாடகத்தில் எடுத்துக் கொண்ட கடுமையான முயற்சியும், பயிற்சியுமே காரணம்.

அந்த வகையில், இன்றும் நாடகத்திலிருந்து திரைக்கு வந்த கலைஞர்கள் பெரும்பாலும் வெற்றியடைந்திருக்கிறார்கள்.

அந்த வகையில்தான், இப்போது இவ்விழாவை நடத்திக் கொண்டிருக்கின்ற டாக்டர் ஐசரி கே.கணேஷ் அவர்களின் தந்தையார் மதிப்பிற்குரிய திரு.ஐசரி வேலன் அவர்களும், நாடக மேடையிலிருந்து தான் திரைத் துறைக்கு வந்தவர். அதனால்தான், அவர் மிக எளிதாக புரட்சித் தலைவர் அவர்களை அணுக முடிந்தது. அவரோடு பழக முடிந்தது. மாண்புமிகு புரட்சித்தலைவரின் அரசியல் வாழ்விலும் அவரோடு சேர்ந்து பயணிக்க முடிந்தது.

திரை வாழ்க்கையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வெற்றியில் சமபங்கு வகித்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். **1965**–ஆம் ஆண்டு புரட்சித் தலைவருடன் நடித்த முதல் படமான **"ஆயிரத்தில் ஒருவனில்"** தொடங்கி புரட்சித் தலைவருடன் 28 படங்களில் கதாநாயகியாக நடித்தவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

கலை வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் இரு பெரும் தலைவர்களும் ஒருமித்த கருத்துடன், மக்கள் நலனையே முன்னிறுத்தி, உழைத்து வெற்றி பெற்றார்கள். மக்களுக்கு, இளைஞர்களுக்கு, மாணவர்களுக்கு முன்மாதிரியாக நடிகர்கள் திகழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர்கள் இந்த இரு பெரும் தலைவர்கள்.

மக்களை மகிழ்ச்சியடைய செய்கின்ற சாதனமாக மட்டும் திரையை பயன்படுத்தாமல், மக்களை நெறிப்படுத்துகின்ற களமாகவும் கலைத்துறையை மாற்றி அமைத்தவர்கள் நமது இருபெரும் தலைவர்கள்.

**நாம பாடுற பாட்டும்,**
**ஆடுற கூத்தும், படிப்பினைத் தந்தாகணும்'**

என்ற பாடல் மூலமே நடிப்பும், பாடல்களும் எப்படி இருக்க வேண்டும் என்று இலக்கணம் சொன்னவர் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அதுபோல

**"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி**
**இந்த நாடே இருக்குது தம்பி"**

என்று நல்ல கருத்துள்ள பாடல்களை தன்னுடைய கதாபாத்திரங்களில் மூலம் நடித்துச் சொன்னதோடு மட்டுமல்லாமல் வாழ்நாளிலும் வாழ்ந்து காட்டியவரும் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். இத்தருணத்தில், நமது இளைஞர்கள் நலன் கருதி தீய கருத்துக்களை பரப்பும் வகையில் படம் எடுக்க வேண்டாம், நடிக்க வேண்டாம் என்று திரைத்துறையினரை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதை நான் அரசியல் ரீதியாக கூறவில்லை. சமுதாய அக்கறையுடன் பதிவு செய்ய விரும்புகிறேன்.

புரட்சித்தலைவர் அவர்கள், தான் நடிக்கும் படங்களில் இளைஞர்களின் ஒழுக்கத்தை சீர்குலைக்கும் வகையில் எந்த ஒரு கதாபாத்திரத்திலும் நடிக்க மாட்டார். அத்தகைய நல்லொழுக்கத்தை தனது வாழ்க்கையிலும் கடைபிடித்து சாதனை படைத்தவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். இதனால்தான், புரட்சித்தலைவரையும், புரட்சித்தலைவி அம்மா அவர்களையும் பின்பற்றிய தொண்டர்கள், அவர்களது கொள்கைகளைப் பின்பற்றி இன்றுவரை கட்டுக்கோப்புடன் இருந்து வருகிறார்கள்.

தொண்டர்கள் ஒரு எஃகு கோட்டையாக திகழ்ந்து, கழகத்தையும், ஆட்சியையும் வழிநடத்துகிறார்கள் என்பதை பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எவ்வளவு சோதனைகள், கஷ்டங்கள் வந்தாலும், அவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற எஃகு கோட்டையின் அரணாக தொண்டர்கள் திகழ்ந்து வருகிறார்கள் இன்றும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், புரட்சித் தலைவி அம்மா அவர்களும் திரைத்துறையில் கோலோச்சிய காலத்தை, ‘**சினிமாவின் பொற்காலம்**’ என்று இன்றும் அனைவராலும் பாராட்டப்படுகிறது.

சினிமாவின் பொற்காலம் என்று அவர்களுடைய காலம் புகழப்படுவதற்கு பலரும் காரணமாக இருந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட விழாக்களின் மூலம் அவர்களை நினைவு கூறுவது எனது கடமை.

அவர்களில் தென்னகத்தைச் சார்ந்த மாடர்ன் தியேட்டர்ஸ் சுந்தரம், ஏ.வி. மெய்யப்பச் செட்டியார், நாகிரெட்டி, எம்.எம்.ஏ.சின்னப்பத்தேவர், எஸ்.எஸ்.வாசன், போன்ற பல சினிமா தயாரிப்பாளர்களும், ஏ.பீம்சிங், கே.சங்கர், ப.நீலகண்டன், ஏ.சி.திருலோகசந்தர், கிருஷ்ணன் – பஞ்சு, ஏ.பி.நாகராஜன்,கே.பாலச்சந்தர் போன்ற பல இயக்குநர்களையும், தியாகராஜ பாகவதர், பி.யூ.சின்னப்பா, கலைவாணர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், கே.ஏ.தங்கவேலு, சந்திரபாபு, பி.எஸ்.வீரப்பா, எம்.என்.நம்பியார், நாகேஷ் போன்ற சிறந்த நடிகர்களையும்,

மற்றும்

பிரபல திரைப்பட நடிகைகள், சிறந்த ஒளிப்பதிவாளர்கள், நடன இயக்குநர்கள், இசையமைப்பாளர்கள், பாடலாசிரியர்கள், பின்னணி பாடகர்கள் ஆகியோரையும் நினைவுகூர்ந்து வணங்க வேண்டும். அவர்கள் போட்ட அடித்தளத்தில்தான் இன்று தமிழ் சினிமா வானுயர வளர்ந்து பிரமிப்பாக நிற்கிறது.

அதே போன்று மறைந்த நடிகர் திரு.ஐசரி வேலன் அவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களோடு இருந்த நட்பை திரைத்துறையோடு நிறுத்திக் கொள்ளாமல், புரட்சித் தலைவரின் அரசியல் வாழ்க்கையிலும் தொடர்ந்தவர் திரு. ஐசரி வேலன் அவர்கள்.

சென்னை ஆர்.கே.நகர் தொகுதியை உருவாக்கி அதற்கு முதல் சட்டமன்ற வேட்பாளராக திரு.ஐசரி வேலனை நிற்க வைத்து, வெற்றி பெறச் செய்து அழகு பார்த்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அதுமட்டுமல்ல, தன் அமைச்சரவையில் இணை அமைச்சர் தரத்தில் பதவி வழங்கி, அழகு பார்த்து மகிழ்ந்தவர் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

**“மகன் தந்தைக்காற்றும் உதவி, இவன் தந்தை**
**என்நோற்றான் கொல்லெனும் சொல்”.**

என்ற திருக்குறளுக்கேற்ப,

தனது தந்தையின் பேரும் புகழும், நின்று நிலைக்கும் வகையில் வேல்ஸ் கல்வி நிறுவனங்களைத் தொடங்கி, அதற்கு வெள்ளி விழாவும் கொண்டாடிய டாக்டர் ஐசரி கே.கணேஷ் அவர்களை நான் மனமாற, உளமார உங்களின் சார்பாக பாராட்டுகின்றேன்.

இன்று வேல்ஸ் கல்வி நிறுவனங்கள் 30 ஆயிரம் மாணாக்கர்களையும், ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களையும் கொண்டு 30 கிளைகளாக வளர்ந்திருப்பதை கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். தந்தையார் ஐசரி வேலன் அவர்கள் புரட்சித்தலைவர் மீது எந்த அளவிற்கு பற்றும் பாசமும் கொண்டு இருந்தாரோ, அதைப்போலவே திரு ஐசரி கணேஷ் அவர்கள் மாண்புமிகு

புரட்சித் தலைவி அம்மா அவர்களிடமும், கழகத்திற்கும் விசுவாசமாக இருந்து வருகிறார்.

மாண்புமிகு அம்மா அவர்கள் திரு. ஐசரி கணேஷ் அவர்களை கழக மாணவரணி செயலாளராக நியமித்தார்கள். அந்த விசுவாசம் தான் என்னை இந்த விழாவிற்கு வரவழைத்திருக்கிறது என்று நினைக்கிறேன்..

கல்வித் துறையில் சிறந்த சேவைகள் செய்து வரும் திரு.ஐசரி கணேஷ் அவர்கள், தற்போது திரைத்துறையிலும் கால்பதித்து, ஒரே வருடத்தில் மூன்று திரைப்படங்களை வெளியிட்டு, அதற்கு இப்போது வெற்றி விழா கொண்டாடுவது மிகவும் பாராட்டுக்குரியது. மூன்று படங்களும் வெற்றி அடைவதற்குக் காரணமாக இருந்த அனைத்து கலைஞர்களுக்கு, நான் மனம் உவந்து பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய வேளையில் மாண்புமிகு அம்மாவின் வழியில் நடைபெறும் அம்மாவின் அரசு திரைப்படத் துறைக்கு செய்த, செய்து வருகின்ற பல்வேறு உன்னதத் திட்டங்களை சுருக்கமாக தெரிவிக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திரைப்பட உலகிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் இந்திய சினிமா நூற்றாண்டு விழாவினைச் சிறப்பான முறையில் நடத்துவதற்கு ஏதுவாக இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாடு அரசின் சார்பில் இவ்விழாவினை நடத்திய தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபைக்கு 10 கோடி ரூபாய் மானியமாக வழங்கினார்கள். இதன் காரணமாக இந்திய சினிமா நூற்றாண்டு விழா சென்னையில் 21.9.2013 முதல் 24.9.2013 வரை 4 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. இந்திய சினிமா நூற்றாண்டு விழாவில் மேதகு இந்திய குடியரசுத்

தலைவர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா மற்றும் பிற மாநில முதலமைச்சர்களும் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

சென்னையில் பல்வேறு காலகட்டங்களில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் இதுவரை 4 கோடியே 75 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

15வது சென்னை சர்வதேச திரைப்பட விழா 2017ல் நடைபெற்ற போது 50 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டது.

அம்மானியத் தொகை 2018ல் நடைபெற்ற 16வது சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூபாய் 75 லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது 12.12.2019 முதல் 19.12.2019 வரை நடைபெறவுள்ள 17வது சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் 75 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் (NFDC) சார்பில் கோவாவில் நடைபெற்ற 12வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவிற்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் 10 லட்சம் ரூபாய் நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கோவாவில் நடைபெற்று வரும் 13வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவிற்கும் 10 லட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்த்திரையுலகில் மாபெரும் சகாப்தமாக விளங்கிய பழம்பெரும் கதாநாயகரும் சிறந்த பாடகருமான எம்.கே.தியாகராஜ பாகவதர் அவர்களின் நினைவினை போற்றும் வகையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் எம்.கே.தியாகராஜ பாகவதர் உருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் தமிழ்நாடு அரசால் அமைக்கப்படவுள்ளது.

கலையுலகின் சிகரமாகத் திகழ்ந்த நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் அவர்களுக்கு சென்னை அடையாறில் ரூபாய் 2 கோடியே 80 இலட்சம் செலவில் மணிமண்டபம் அமைக்கப்பட்டு, 1.10.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

சென்னை அருகே உள்ள பையனூர் பகுதியில் தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனம், திரைப்படக் கலைஞர்கள், தொழிலாளர்களால் உருவாக்கப்படவுள்ள மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரால் அமைக்கப்படுகின்ற அரங்கிற்கு 5 கோடி ரூபாய் நிதி வழங்க நான் உத்தரவிட்டேன். முதல் தவணையாக 1 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டுள்ளது.

குறைந்த முதலீட்டில் தரமான திரைப்படம் எடுக்கும் சிறு தயாரிப்பாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில், அத்தகு திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்குகிறது. இவ்வாறு வழங்கப்பட்ட மானியத் தொகை 10.9.1993 அன்று 2 லட்சம் ரூபாயாக இருந்ததை 3 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இம்மானியத்தை 1.10.2004 அன்று மேலும் உயர்த்தி, 7 இலட்சம் ரூபாய் வழங்க ஆணையிட்டு கலைத்துறையினரை மகிழ்வித்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

2007 முதல் 2014 ஆம் ஆண்டுகளில் குறைந்த செலவில் தயாரித்து வெளியான தரமான 149 தமிழ்த் திரைப்படங்களின் தயாரிப்பாளர்களுக்கு அரசு மானியம் தலா 7 இலட்சம் ரூபாய் வீதம் 10 கோடியே 43 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை தயாரிப்பாளர்களுக்கு 20.6.2018 அன்று என்னால் வழங்கப்பட்டது.

பெரிய திரையை மட்டுமின்றி, இன்று அனைவரின் வீட்டிலும் உள்ள சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் நல்ல தரமான சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசாக 2 லட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 1 லட்சம் ரூபாயும் வழங்கப்படுகின்றன.

சிறந்த நெடுந்தொடர், கதாநாயகர்கள், கதாநாயகிகள், சிறந்த சாதனையாளர், சிறந்த வாழ்நாள் சாதனையாளர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வுக்குழு தேர்வு செய்து தனது பரிந்துரையை அரசிடம் வழங்கியதன் அடிப்படையில் சின்னத்திரை விருதுகள் ரொக்கம், நினைவுப்பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் விரைவில் வழங்கப்படவுள்ளது.

மேலும், தமிழ்த் திரையுலகில் தமது எழுத்தாலும் நடிப்பாலும் தனிமுத்திரை பதித்த பேரறிஞர் அண்ணா, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், தியாகராஜ பாகவதர், ராஜா சாண்டோ சின்னப்ப தேவர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜிகணேசன், புரட்சித் தலைவி அம்மா ஆகியோரின் பெயர்களில்

கலைத்துறை வித்தகர்களுக்கு தலா 5 சவரன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

திரைப்பட நலவாரியத்தில், 39 சங்கங்களைச் சார்ந்த திரைப்பட / சின்னத்திரைத் தொழிலாளர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் உறுப்பினர்களாகச் சேரத் தகுதி பெற்றவர்கள். இந்நலவாரியத்தில் இதுவரையில், 21,611 நபர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். திரைப்படத் துறையினர் நல வாரியத்தின் மூலம் கடந்த 2018ஆம் ஆண்டு வரை திருமண உதவித்தொகை, கண்கண்ணாடி உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, இயற்கை மரணம், ஈமச்சடங்கு உதவித் தொகை மற்றும் விபத்தினால் மரணமடைந்த 2,054 பயனாளிகளுக்கு 62.40 லட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இன்னும் பல திட்டங்களும் செயல்பாடுகளும் இங்கே சொல்ல விடுபட்டிருக்கின்றன என்றாலும், மாண்புமிகு அம்மாவின் அரசு கலைத் துறைக்காகவும், திரைத் துறைக்காகவும் தொடர்ந்து பல திட்டங்களை வழங்கும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இரு பெரும் தலைவர்களும் உருவான புனித இடத்தை நாங்கள் ஒரு காலமும் மறக்கமாட்டோம்.

அதைப்போல, நீங்களும் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்குகிற திட்டங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, திரு.ஐசரி கணேஷ் அவர்களும், வேல்ஸ் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனமும் திரைத்துறையில் தொடர்ந்து வெற்றி படைத்து, அனைத்து தரப்பு மக்களும் பாராட்டும்படியான திரைப்படங்களை தமிழ் ரசிகர்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

திரு. ஐசரி கணேஷ் அவர்கள் தனது தந்தையார் போலவே கலைத் துறையினரின் வாழ்வு உயரவேண்டுமென்ற அக்கறை கொண்டவர். ஏழ்மையில் வாழும் கலைத் துறையினருக்கு, தனது சொந்தப் பணத்தில் நிதியுதவிகளையும், மருத்துவ உதவிகளையும் செய்து வருகிறார் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், திறமையுள்ள படைப்பாளிகளையும், நடிகர், நடிகைகளையும் அடையாளம் கண்டு, அவர்களது திறமையினை வெளிக்கொணரும் வண்ணம், தனது தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் வாய்ப்பளித்து, அவர்களது வாழ்வில் புதிய அத்தியாயத்தை தொடங்கி வைத்துள்ளார் என்பதை இங்கு பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த நிறுவனத்தின் வெற்றிக்கு உழைத்த திரைப்படக் கலைஞர்கள் மற்றும் விருது பெற்ற கலைஞர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**